# தேடல் மற்றும் மீட்புக் குழு (Search & Rescue Committee)

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.சி.கதிரவன், இ.ஆ.ப.,**

ந.க.20985/2017/பே.மே. நாள்:30.08.2017

பொருள்: பேரிடர் மேலாண்மை - வடகிழக்கு பருவ மழை 2017 - கிருஷ்ணகிரி மாவட்டம் - மாவட்டத்தில் பேரிடர் நிகழ்வு பொருட்டு தேடல் மற்றும் மீட்பு குழு நியமனம் செய்தல் - ஆணைகள் பிறப்பித்தல்.

பார்வை: முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் நாள்: 23.08.2017.

- - - - - -

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவ மழை காலத்தில் பேரிடர் நிகழ்வுகளில் பெரும் சேதத்தை தவிர்க்கும் பொருட்டு பொது மக்களை பாதுகாக்க தேடல் மற்றும் மீட்பு குழு நியமித்து ஆணையிடப்படுகிறது.

1. கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலர் (சார் ஆட்சியர்/வருவாய் கோட்ட அலுவலர்)
2. மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர்,
3. இணை இயக்குநர் (நலப் பணிகள்) / துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்),
4. இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு துறை),
5. மாவட்ட வன அலுவலர், ஓசூர்,
6. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி,
7. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), தருமபுரி,
8. நகராட்சி ஆணையாளர், கிருஷ்ணகிரி / ஓசூர்,
9. காவல் துணை கண்காணிப்பாளர்,
10. ஏரியா கமாண்டன்ட், ஊர்காவல்படை, கிருஷ்ணகிரி
11. உதவி இயக்குநர், மீன்வளம்,
12. உதவி செயற்பொறியாளர், பொது பணித்துறை (நீ.ஆ.ஆ),
13. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்,
14. வருவாய் வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்,
15. வருவாய் ஆய்வாளர்,
16. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர்

i. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகளுக்குத் தேவையான மீட்பு சாதனங்கள் / கருவிகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

ii. மீட்பு பணிகளுக்கு பயன்படும் வகையில் போக்குவரத்து வாகனங்கள் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

iii. மழை / பெரு வெள்ளம் ஏற்படும் சமயங்களில் மீட்பு பணிக்காக நீச்சல் தெரிந்தவர்களின் விவரங்களினை கிராம அளவில் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

iv. பள்ளிக் கூடங்கள், கல்யாண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள், திரையரங்குகள், கோயில் மண்டபங்கள் போன்றவற்றின் விவரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

v. மீட்பு பணிகளின் போது முதலுதவி மருத்துவ உபகரணங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

vi. தொற்று நோய்கள் பரவுவதை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

vii. நிகழ்வுகள் குறித்து உண்மையான, தெளிவான அறிக்கையை உடனுக்குடன் பொறுப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

(ஒம்/-) சி.கதிரவன்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

/ உண்மை நகல் /

மாவட்ட ஆட்சியருக்காக.

பெறுதல்

சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (மின்னஞ்சல் வாயிலாக)
(அலுவலகத் தலைவர்கள் தங்களின் சார்நிலை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு சார்வு செய்யவேண்டியது)

நகல் : முதன்மை செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 - தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி,

நகல்:திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி - உரிய நடவடிக்கைக்காக

நகல் : செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (நீ.ஆ.து), தர்மபுரி,

நகல் : சார்ஆட்சியர், ஓசூர்,

நகல் : வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு,

நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு.